
# திராவிடத்தால் வாழ்கிறோம்

767

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திட்டமிடல் இல்லாத ஒன்றிய திட்டங்கள்!

கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவித்தொகையை வழங்காத ஒன்றிய அரசின் பொறுப்பற்ற தன்மையைச் சுட்டிக்காட்டி பொருளாதார வல்லுநர்கள் ஜீன் தரேஸ் (Jean Dreze), ரித்திகா ஹெரா (Reetika khera) எழுதிய கட்டுரையை 'தி இந்து' ஆங்கில நாளிதழ் சமீபத்தில் வெளியிட்டது.

கர்ப்பமான மகளிரின் நலன்களைப் பேணுவதில் ஒன்றிய அரசின் செயல்திறனுக்கும் தமிழ்நாடு அரசின் செயல்திறனுக்கும் உள்ள வேறுபாட்டை அந்தக் கட்டுரை எடுத்துக்காட்டியது. அந்தக் கட்டுரையின் தமிழ்ச் சுருக்கத்தைத் தனது முகநூலில் பகிர்ந்துள்ளார் எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர்.

"தமிழ்நாட்டில் கருவுற்றப் பெண்களில் 84 விழுக்காட்டினர் கர்ப்பக்கால உதவி பெறுகின்றனர். ஒன்றிய அரசு கர்ப்பக்கால உதவித்தொகை வழங்குவதற்காக, ஒரு திட்டத்தை (PMMVY) 2017-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்துகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் 5,000 ரூபாய் மட்டுமே தருகிறது. அந்தத் தொகையையும் 9 விழுக்காடு பெண்கள் மட்டுமே பெறுகின்றனர். 2013-ஆம் ஆண்டின் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் கர்ப்பமான பெண்களுக்கு 6,000 ரூபாய் தரவேண்டும் என்கிறது. இப்போதுள்ள விலைவாசியை ஒப்பிட்டால், 12,000 ரூபாய் தரவேண்டும். ஆனால், ஒன்றிய அரசு தருவதோ வெறும் 5,000 ரூபாய் மட்டுமே. அதுவும் 10 விழுக்காட்டிற்கும் குறைவான பெண்களுக்கே தரப்படுகிறது.

90 விழுக்காடு மகளிருக்கு 6,000 ரூபாய் தரவேண்டுமெனில், குறைந்தபட்சம் 12,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கவேண்டும். 2023-24 ஆம் நிதியாண்டில் 870 கோடி ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசு செலவிட்டுள்ளது. குறைவான மகளிர் மட்டுமே, ஒன்றிய அரசின் கர்ப்பகால உதவித்தொகை பெறுவதற்குக் காரணம், குறைவான நபர்கள் விண்ணப்பிக்கிறார்கள் என்பதல்ல. மாறாக, விண்ணப்பித்தாலும் தரப்படுவதில்லை என்பதே உண்மை.

இத்திட்டத்தில் உள்ள குளறுபடிகளே இத்திட்டத்தின் தோல்விக்குக் காரணம். என அந்தக் கட்டுரை நீள்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். கர்ப்பிணிப் பெண்களுக்கான திட்டத்தைக் கூட முறையாகச் செயல்படுத்தத் தெரியாத இவர்கள் தான் நமக்குப் பாடம் எடுக்கின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



### திரும்பிப் பார்க்க வைக்கும் படம்!



கதிர்.நாராயணன்

1995-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்விழாவில், நானும் பங்கேற்று, தலைவருக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்ந்தேன். அப்போது எடுத்துக்கொண்ட படம் இது. அன்று, அன்பில் பொய்யாமொழி அவர்களும் உடனிருந்தார். 30 ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட இப்புகைப் படம் தலைவரின் பிறந்தநாளின் போதெல்லாம் அந்த நாட்களைத் திரும்பிப் பார்க்க வைக்கும்.

– கதிர்.நாராயணன், சிவகங்கை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### கழக உறுப்பினரின் ஒரு தீர்மானம்!

1957-ஆம் ஆண்டு, மே முதல் வாரத்தில் சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தில், கழக உறுப்பினர் தாண்டவன் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். சேலத்தில் கிடைக்கும் இரும்பு கனிமத்தைத் தனியார் வெட்டி எடுக்கக் கூடாது, அவற்றை அரசே வெட்டி எடுக்க வேண்டும் என்கிற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தில் காங்கிரஸ் ஆதிக்கம் இருந்தாலும், கழக உறுப்பினரின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம், தமிழ்நாட்டில் பெரும் வாதபிரதிவாதத்தை உருவாக்கியது.

## மாநாடு

ர.பிரகாசு

53

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# கடலூரில் கூடிய 'திராவிட நாடு!'

முதல் இந்தி எதிர்ப்புப் போருக்குப் பிறகு தமிழ்நாடெங்கும் 'திராவிட நாடு' கோரிக்கை வலுப்பெறத் தொடங்கியது. இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போர் நெருங்கிய சமயத்தில், அந்த உணர்வு கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. திராவிட இயக்கத்தாரிடையே மட்டுமின்றி, சாமானிய மக்களிடத்திலும் திராவிட நாடு உணர்வு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதற்குச் சான்றுதான் 1947-ஆம் ஆண்டு செப்டம்பர் 14-ஆம் தேதி, கடலூரில் நடைபெற்ற திராவிட நாடு பிரிவினை மாநாடு.

இந்த மாநாடு தனிப்பட்ட ஓர் இயக்கத்தாலோ, அரசியல் கட்சியாலோ நடத்தப்பட்டது அல்ல. பங்கேற்றவர்களில், பலரும் பொதுமக்கள். ஆனால், மாநாட்டில் உரையாற்ற அழைக்கப்பட்டவர்கள் பலரும் திராவிட இயக்கத் தலைவர்கள். வகுப்புவாரி ஆணையை அமல்படுத்தக் காரணமான எஸ்.முத்தையா முதலியார் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். சென்னை பாரிஸ்டர் டாக்டர் எ.கிருஷ்ணசாமி மாநாட்டைத் திறந்துவைத்தார். இந்திராணி பாலசுப்ரமணியம் என்பவர் கொடி ஏற்றினார். பி.பாலசுப்ரமணியம் திராவிட நாட்டுப் படத்தையும், திரு.வி.க. அவர்கள் தந்தை பெரியார் படத்தையும் திறந்து வைத்தனர்.

வி.கே.எஸ்.சண்முகசுந்தரம் மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராகவும், சி.முனுசாமி மாநாட்டின் வரவேற்புக்குழுச் செயலாளராகவும் சிறப்புற செயலாற்றினர். இருபதாயிரம் பேருக்கும் குறைவில்லாத மக்கள் கூட்டம் திரண்டிருந்தது.

சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி, இந்துக்கள், இசுலாமியர்கள், பவுத்தர்கள் எனப் பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்தவர்களும் தமிழர்கள், மலையாளிகள், கன்னடர்கள், தெலுங்கர்கள் என திராவிட நாட்டின் பிரதான மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எனக் கலவையான மக்கள் தன்னெழுச்சியோடு கூடியிருந்தனர்.

திராவிட இயக்கத் தலைவர்கள் மட்டுமின்றி, மாநாட்டில் பங்கேற்ற திரு.வி.க. அவர்களும் திராவிட நாடு லட்சியத்தை வலியுறுத்தி சொற்பொழிவாற்றினார். வகுப்புரிமைக் கோரிக்கையை காங்கிரஸ் ஏற்கவில்லை என பெரியார் காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் இருந்து வெளியேறியபோது, அம்மாநாட்டின் தலைவராக இருந்தவர் திரு.வி.க. ஆனால், ஒருகட்டத்தில் அவரே இந்தித் திணிப்புக்கு எதிராகவும், திராவிட நாடு லட்சியத்திற்கு ஆதரவாகவும் போர்க்குரல் எழுப்பும் அளவுக்கு பெரியார் பொதுச்சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்.

மாநாடு குறித்து 20.09.1947 அன்று வெளியான குடிஅரசில் எழுதப்பட்டிருந்த செய்தி இன்றைய சூழலுக்கு மிகப் பொருத்தமானது.

"திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கை இப்போது பலமாகிவிட்டது. இதை ஒழிக்கவே பலமான மத்திய அரசாங்கம் வேண்டும். சர்வ அதிகாரங்களும் மத்திய அரசிடம் இருக்கும்படியும், மாகாணங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற அடிமைகளாக இருக்க வேண்டும் என்கின்ற தன்மையிலும் சர்வாதிகார மத்திய ஆட்சி உருவாகி வருகிறது. அதற்கேற்ற அடக்குமுறைகள் நீதியாகி வருகின்றன" என்றது அச்செய்தி. மாநில உரிமைகள் ஒவ்வொன்றாக நசுக்கப்பட்டு, இப்போது தென்னிந்தியாவின் தயவே இன்றி, சட்டங்களை இயற்றும் வகையில் மக்களவைத் தொகுதிகளை உயர்த்த முனைந்துகொண்டிருக்கிறது ஒன்றிய அரசு.

அதனால்தான் பெரியார் புத்துலகின் தொலைநோக்காளர்...




...கூட்டம் திரளும்

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

53

**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# கலைஞரின் இதயத்திலிருந்து..!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கதை- திரைக்கதை- வசனம் எழுத, 1966-ஆம் ஆண்டு முரசொலி மாறன் அவர்கள் இயக்கி தயாரித்த திரைப்படம் 'மறக்க முடியுமா?'. 2003-ஆம் ஆண்டு முரசொலி மாறன் அவர்களின் மறைவைத் தொடர்ந்து, குமுதம் வார இதழில் ஐந்து வாரம் உணர்ச்சி பொங்க மாறனுடனான நினைவுகளைக் கட்டுரையாகத் தீட்டினார் கலைஞர், அதற்கு அவர் சூட்டிய தலைப்பு 'மறக்க முடியுமா?'.

இந்தக் கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு, அரிய சில புகைப்படங்களுடன் தலைமைக் கழக வெளியீடாக 2004-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியானது. முத்தமிழறிஞர் கலைஞருக்கும்-முரசொலி மாறனுக்கும் ஒரு கட்சியின் தலைவர்-தொண்டர் என்ற பிணைப்பைத் தாண்டிய குடும்பப் பாசம் இருந்தது. 'என் தோளிலும் மடியிலும் இருந்து வளர்ந்தவர் மாறன்' என்று அந்த நினைவுகளை எல்லாம் உருக்கமான நடையில் தலைவர் கலைஞர் விவரிக்கையில் கண்கள் குளமாவதைத் தவிர்க்க முடியவில்லை.




முரசொலி மாறன் அவர்களின் இயற்பெயர், 'தியாகராஜசுந்தரம்'. பிறகு, நெடுமாறன் என்று மாற்றப்பட்டு, அது மாறன் ஆகி, இறுதியில் 'முரசொலி மாறன்' என்ற புகழுக்குரிய பெயராக விஞ்சி நிற்கிறது. பெயர் மாற்றம் அடைந்த வரலாற்றில் தொடங்கி தன்னுடைய பால்ய காலத்தில் மாறனுடனான நினைவுகளை எல்லாம் உணர்வு ததும்ப பகிர்கிறார் கலைஞர்.

இளமைப் பருவத்தில் மாறனின் நாக்கு நுனியில் வளர்ந்த சவ்வு, பள்ளிப் பருவத்தில் அவர் பெற்றிருந்த கூரிய அறிவுத்திறன், 'தூக்குமேடை' நாடகத்தில் பார்ப்பனப் பெண் வேடமேற்று நடித்தது, திரைப்படங்களுக்குக் கதை திரைக்கதை வசனம் எழுதி அவற்றை இயக்கித் தயாரித்து வெளியிட்டது எனப் பல்வேறு சுவாரசியமான நினைவுகள் நம்மைப் புருவம் உயர்த்தச் செய்கின்றன.

கலைஞரின் தாயார் அஞ்சுகத்தம்மையார் மாறனைச் செல்லமாக 'தேராசன்' என்றுதான் அழைப்பாராம். அவருடைய இறுதி ஆசைகளில் ஒன்று மாறனுக்கு மணமுடித்துப் பார்க்க வேண்டும் என்பது. ஆனால், மாறன் மறுத்து வந்ததால், அஞ்சுகம் அம்மையாரின் விருப்பம் நிராசையானது. அவர் மறைவுக்குப் பின்னர் 1963-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமையில், அவருடைய பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்றே மாறன்-மல்லிகா இணையரின் திருமணம் நடந்தேறியது.

அஞ்சுகம் அம்மையாரின் மறைவுக்கு காமராஜர் நேரில் வந்து, இறுதி அஞ்சலி செலுத்திய தகவல் அரசியல் பண்புகளில் குறிப்பிட வேண்டிய அம்சம்.

முரசொலி இதழின் ஆசிரியராக, மிசா சிறைக் கைதியாக, தலைமைச் செயற்குழு உறுப்பினராக, மக்களவை உறுப்பினராக, நாடாளுமன்ற குழுத் தலைவராக, ஒன்றிய அமைச்சராக, 'ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?', 'மாநில சுயாட்சி', 'திராவிட இயக்க வரலாறு' ஆகிய நூல்களின் ஆசிரியராக மட்டுமே நாம் அறிந்திருந்த முரசொலி மாறன் அவர்களின் அறியப்படாத பல சித்திரங்களை, இந்நூல் மூலம் நமக்கு அளிக்கிறார் கலைஞர்.

...வாசிப்போம்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.